**அனுப்புநர்:**
மாவட்ட ஆட்சியர்,
சிவகங்கை.

**பெறுநர்:**
மாவட்ட தகவல் அலுவலர்,
NIC, சிவகங்கை.

**ந.க.ப்பி5/2103/2019** **நாள்:12.11.2019**

**அய்யா,**

**பொருள் :** பணியமைப்பு - சிவகங்கை மாவட்டம் - ஊரக வளர்ச்சி அலகு - காலியாக உள்ள இரவு காவலர் பணியிடம் பூர்த்தி செய்தல் - மாவட்ட இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது - தொடர்பாக.

**பார்வை :** தொடர்புடைய ஆவணங்கள்.

=====

சிவகங்கை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி அலகில் காலியாக உள்ள இரவு காவலர் பணியிடம் நிரப்புதல் தொடர்பான விளம்பர அறிவிக்கை மற்றும் பத்திரிகை செய்தியினை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். இதனை சிவகங்கை மாவட்ட இணையதளத்தில் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு : 1. அறிவிக்கை.
2. மாதிரி விண்ணப்பம்.

12/11/19

**மாவட்ட ஆட்சியர்,**
**சிவகங்கை.**

Scanned by CamScanner

## ஊரக வளர்ச்சி அலகு சிவகங்கை மாவட்டம்

## இரவு காவலர் பதவிக்கான விளம்பர அறிவிக்கை (Notification)

சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் காலியாக உள்ள இரவுக்காவலர் பணியிடம் பூர்த்தி செய்யும் / நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 25.11.2019 அன்று பிற்பகல் 05.45 மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | - | இரவு காவலர் |
| 2. | சம்பளம் | - | ரூ.15700 - 50000 என்ற சம்பள ஏற்ற முறையில் அரசு நிர்ணயம் செய்யும் படிகளுடன் |
| 3. | வயது | - | 01.07.2019 அன்று 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். |
| | வகுப்பு | | அதிகபட்ச வயது வரம்பு (01.07.2019 அன்றுள்ளவாறு) |
| | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (அருந்ததியினர் / முன்னுரிமையுடையவர் (DW) | | 35 வயதுக்குள் |
| 4. | மொத்த பணியிடங்கள் | - | 1 எண்ணிக்கை |
| 5. | இடஒதுக்கீடு விவரங்கள் | | |

| No. | Rotation | No of vacant |
|---|---|---|
| 1 | Scheduled castes – (Arunthathiyars on preferential basis) (DW) | 1 |
| | Total | 1 |

| | | | |
|---|---|---|---|
| 6. | கல்வித் தகுதி | - | எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| 7. | விண்ணப்ப படிவம் | - | இப்பணியிடத்திற்கான மாதிரி விண்ணப்படிவத்தினை www.sivaganga.tn.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 8. | கடைசி நாள் | - | 25.11.2019-பிற்பகல் 05.45 மணிவரை |

Scanned by CamScanner

**நிபந்தனைகள்:**

1. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை www.sivaganga.tn.nic.in என்ற இணையதளத்தில் உள்ள மாதிரி விண்ணப்ப வடிவத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும்.
2. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தை 25.11.2019 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சிப் பிரிவு), மாவட்ட ஆட்சியரகம், சிவகங்கை என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும்.
3. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் உள்ளவாறு விபரங்கள் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்படவேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.
4. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது.
6. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.

மாவட்ட ஆட்சியர்க்காக
சிவகங்கை.

Scanned by CamScanner

ந.க.ப்பி5/2103/2019
நாள் : .11.2019

## பத்திரிக்கை செய்தி

சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் அரசு தலைப்பில் காலியாக உள்ள ஒரு (1) இரவு காவலர் பணியிடத்தில்

| | | |
|---|---|---|
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (அருந்ததியினர் / முன்னுரிமையுடையவர்) | - | Scheduled castes – (Arunthathiyars on preferential basis-DW) -1 |

பிரிவில் நிரப்பப்பட உள்ளது. இதற்கான கல்வித்தகுதி எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

இரவு காலவலர் பணி நியமனத்திற்கு விண்ணப்பிக்க தேவையான இன சுழற்சி/இட ஒதுக்கீடு மற்றும் விண்ணப்ப படிவம் ஆகியவை இம்மாவட்டத்தின் www.sivaganga.tn.nic.in இணையதளத்தில் இடம்பெற்றுள்ளது. காலிப்பணியிடத்திற்கான விண்ணப்பத்தினை - .11.2019 தேதி முதல் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இப்பதவிக்கு 01.07.2019 அன்று குறைந்தபட்ச வயது வரம்பு 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (அருந்ததியினர் / முன்னுரிமையுடையவர்) அதிகபட்ச வயது 35 ஆகும்.

மேற்கண்ட தகுதியுடையவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் .11.2019 தேதி முதல் 25.11.2019 தேதி வரை அலுவலக வேலை நேரத்தில் உரிய ஆவணங்களுடன் 25.11.2019 அன்று மாலை 05.45 மணிக்குள்ளாக சிவகங்கை மாவட்ட ஆட்சியரக வளர்ச்சிப்பிரிவில் கிடைக்கும் வகையில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்
சிவகங்கை.

Scanned by CamScanner